KFA-I-M

# முதலாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - நான்கு - ________

நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
|---|---|
| இடம்: | வரிசை எண்: |

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. 'இணைந்து' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ________
   அ) நடந்து ஆ) பிரிந்து இ) எழுந்து
2. 'சிறப்படைந்தேன்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) சிறப்பு + அடைந்தேன் ஆ) சிறப் + அடைந்தேன் இ) சிற + படைந்தேன்
3. 'மணி + பயறு' என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) மணிபயறு ஆ) மணபயறு இ) மணிப்பயறு
4. அன்பரசன், தன் தாத்தாவுடன் சென்ற இடம் ________
   அ) கடைத்தெரு ஆ) பக்கத்து ஊர் இ) பூங்கா
5. பனை ________ வகை தாவரம் ஆகும்.
   அ) புல் ஆ) நீர்வாழ் தாவரம் இ) ஓலை
6. கற்சிலை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) கல் + சிலை ஆ) கற்று + சிலை இ) கற் + சிலை
7. செவ்வாய் + கிழமை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
   அ) செவ்வாய்கிழமை ஆ) செவ்வாய்க்கிழமை இ) செவ்வாகிழமை
8. 'அரிய' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ________
   அ) எளிய ஆ) பழைய இ) நிறைய
9. 'பிறப்பெடுத்தேன்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) பிறப் + பெடுத்தேன் ஆ) பிறப்பு + எடுத்தேன் இ) பிறப் + எடுத்தேன்
10. 'அன்னை + தமிழே' - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ________
    அ) அன்னத்தமிழே ஆ) அன்னைத்தமிழே இ) அன்னத்தமிழே

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

11. விசயநகரை ________ என்ற மாமன்னர் ஆண்டு வந்தார்.
12. உற்சவத்தைக் காண அண்டை நாட்டு அரசர் ________ வந்திருந்தார்.
13. "காலையில் ________ நிறத்திலும், நடுப்பகலில் ________ நிறத்திலும், இரவில் ________ உருமாறும் அற்புதக் குருவி ஒன்றைக் கொண்டு வந்து தரச் சொல்லுங்களேன்.

III. **பொருத்துக.** 5 × 1 = 5

14. அ) தையலர் — ஆடு கட்டும் இடம்
    ஆ) மாட்டாந்தொழு — பெண்கள்
    இ) அவன் — ஓடினார்கள்
    ஈ) அவர்கள் — மாடு கட்டும் இடம்
    உ) ஆட்டாந்தொழு — எழுதினான்

IV. **பொருள் கூறுக.** 5 × 1 = 5

15. அண்டை 16. வியப்பு 17. சாதுர்யம்
18. உற்சவம் 19. ஆசி

V. **அ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

20. மன்னர் மகிழ்ச்சி அடையக் காரணம் என்ன?
21. சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?
22. அன்பரசன் யாரிடம் ஆசி வாங்கினான்?
23. பனைமரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?
24. விசயவர்த்தனர் எப்படிப்பட்ட குருவி வேண்டும் என்று கூறினார்?
25. எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
26. பனைமரத்தை 'கற்பகத்தரு' என்று ஏன் கூறுகின்றனர்?

**ஆ) வினாவிற்கு விடையளி.** 1 × 5 = 5

27. உடல்நிலை சரியில்லாததால் இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் வரைக.

VI. **பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு விடை எழுதுக.** 10 × 1 = 10

28. அ) உருவத்தில் பெரியது யானை
    ______________ கூட்டம் கூட்டமாய் வாழும்.

    ஆ) வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்
    காட்டில் பலவகை ______________ காணப்படும்.

    (பெயர்ச்சொல்லின் இறுதியில் 'கள்' சேர்த்து பன்மையாக்குக.)

29. அ) கதை - ______________ ஆ) சடை - ______________

    (இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்து புதிய சொல்லை உருவாக்குக.)

30. யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்.

    (பழமொழியை சரியாக எழுதுக.)

31. இயற்கை தீட்டிய ஓவியமே
    ______________ வண்ணங்களாலான காவியமே
    வானவில்லே வண்ண ______________
    கரு மேகம் பொழியும்
    பெரு ______________ பின் வருவாய்
    என்னோடு விளையாட
    நித்தம் நித்தம் நீ ______________ வேண்டும்.

    (பாடலை நிறைவு செய்)